கிறது. அந்த முறையில் சிந்தனை செலுத்தி, இவ்வளவு தூரம் அக்கறை காட்டாமல் இருந்தால் நலமாக இருக்கும். யார் இடத்தில் இருந்தாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : லஞ்சம் என்ற உருவத்தில் இல்லாமல் வேலைகளை முடித்துக் கொடுப்பதாகக் கூறி, 1,000 ரூபாய் 2,000 ரூபாய் வாங்கிக்கொண்டு வருகிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களைப் பற்றி இந்தக் கமிட்டியாரிடத்தில் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பலவிதக் குற்றங்கள் நடைபெறுகின்றன. எது எது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அதற்குத் தக்கபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஒரு சினிமாப் படத்தில் நடிக்க 2 லட்சம் ரூபாய் வாங்கிவிட்டு சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய இன்கம்—டாக்ஸை ஏமாற்ற 20 ஆயிரம் ரூபாய் வாங்கினேன் என்று சொன்னால் மீதிப் பணம் கருப்புப் பணம்தானே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கருப்புப் பணம் என்பதற்கு விளக்கமோ, வியாக்கியானமோ கூறுவதற்கான சந்தர்ப்பம் இது அல்ல. எது எது கருப்புப் பணம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதில் சில பேர்களுக்கு அக்கறை இருப்பதால் தான் அதிகம் கேட்கிறார்கள். இப்போது நான் அதைப் பற்றி விளக்கம் கூறுவதாக இல்லை.

திரு. ஆர். ரெங்கசாமி : லஞ்சம் கொடுக்கிறவர்களையும், தண்டிக்க இடம் இருப்பதால், கொடுத்ததைச் சொல்ல முடியாமல் இருக்கிறது. அது லஞ்சம் வாங்குகிறவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. கொடுக்கிறவர்களை விட்டு வாங்குகிறவர்களை மட்டும் தண்டிக்கக் கூடிய முறையை ஏற்படுத்துவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் இல்லை. அது சரியல்ல. லஞ்சம் கொடுப்பதும் தவறுதான். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் : லஞ்சம் கொடுக்காவிட்டால் காரியம் ஆவதே கிடையாது. கண்டிப்பாக நிர்ப்பந்தத்தின்பேரில் கொடுக்க வேண்டியிருக்கிறது. கொடுத்ததை வெளியே சொல்லும்போது அவர்களுக்கே பாதகமாக வருவதால் அதைப் பற்றிச் சொல்லாமல் விடுகிறார்கள். கொடுப்பவர்களை விட்டுவிட்டு லஞ்சம் வாங்குகிறவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுகிற நிமித்தத்திற்கு இடம் கொடுக்காமல் பார்ப்பதுதான் முக்கியமான லட்சியம். இந்த டைரக்டரேட் லட்சியம் அதுதான்.

அரூர் தாலுகாவில் காகிதத் தொழிற்சாலை

* 324 கேள்வி—**திரு. சி. மாணிக்கம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டம் அரூர் தொகுதியில் கிடைக்கும் ஏராளமான மூங்கிலைக்கொண்டு அங்கு ஓர் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் நினைப்பது போல் அரூர் பகுதியில் ஏராளமான மூங்கில் கிடையாது. அங்கு கிடைக்கும் மூங்கிலைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியாது.

19th March 1964]

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, 1962-ல் இதே கேள்வியைக் கேட்டபோது, இங்கு கிடைக்கும் மூங்கிலைக்கொண்டு ஈரோடில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு உதவுகிறது என்று சொன்னார்கள். ரிசர்வ் காடுகளில் உள்ள மூங்கிலைக்கொண்டு, மிகப் பின்தங்கிய சேலம் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க அமைச்சர் முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சர்வே செய்யப்பட்டது. இப்போது அமைத்திருக்கிற சேஷசாயி பேப்பர் கம்பெனிக்கே போதிய அளவு மூங்கில் கிடைக்கவில்லை. பத்து இடங்களில் மூங்கில் இருப்பதைப் பார்த்து ஏராளமாக மூங்கில் இருக்கிறது என்று சொல்லுவது ஸயண்டிஃபிக் ஆகாது. சர்வே செய்துதான் இந்த விளக்கம் கொடுத்திருக்கிறோம்.

திரு. வி. ராமநாதன் : திருச்சி மாவட்டத்தில் பேட்டை வாய்த் தலையில் தனியார் துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கிற காகிதத் தொழிற்சாலை எப்போது உற்பத்தி தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The main question relates to Salem District.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருக்கு அது பற்றித் தகவல் இல்லை.

திரு. ம. கமலநாதன் : மூங்கில் வளர்க்க நல்ல சூழ்நிலை இருக்கிற காடுகளில் மூங்கில் வளர்த்து அங்கே காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு 10–15 வருஷங்கள் ஆகும். அதற்குப் பின்னால் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : சேஷசாயி பேப்பர் மில்ஸுக்கு எந்தெந்த ஜில்லாவிலிருந்து எவ்வளவு எவ்வளவு சத வீதம் மூங்கில்கள் வருகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டிலிருந்து 30,000 டன் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்.

Memorial for Swami Vivekananda

*325 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : } Will the Hon.
PULAVAR K. GOVINDAN : }
the Chief Minister be pleased to state—

(*a*) whether the Central Government have addressed any communication regarding the construction of Vivekananda memorial in Kanyakumari district ; and

(*b*) the details of the steps taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 'Yes'

(*b*) The Government have accorded permission to Sri Ramakrishna Tapovanam to erect a statue of Swami Vivekananda on the shore between the temple and the sea at Kanyakumari. The All India Swami Vivekananda Centenary Celebration Committee has sought the permission of the Government to erect a statue of the Swami on the Vivekananda Rock in the sea near Kanyakumari and the matter is under consideration.